
# அன்பு
## முதலானவர் முடிவானவர்

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது;
அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு
தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது,
அயோக்கியமானதைச் செய்யாது,
தற்பொழிவை நாடாது, சினமடையாது,
தீங்கு நினையாது,
அநியாயத்தில் சந்தோஷப்படாமல்,
சத்தியத்தில் சந்தோஷப்படும்.
சகலத்தையும் தாங்கும், சகலத்தையும்
விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும்,
சகலத்தையும் சகிக்கும்.
அன்பு ஒருக்காலும் ஒழியாது. நிறைவானது
வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.
இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு
இம்மூன்றும் நிலைத்திருக்கிறது;
இவைகளில் அன்பே பெரியது.

சகோ. எல்விஸ் ஷான் பீட்டர்ஸ்
(www.soul2win.com)

# 2



# மனம் திரும்புங்கள்

நம்முடைய மனதின் எண்ணமும், நமது செயலும் வேறுபட்டு இருப்பதை தேவன் வேதாகமத்தின் வழியாய் சுட்டிக்காட்டுகிறார். இயேசுவை நம்முடைய வாழ்க்கையில் வெளிப்படுத்த வேண்டுமாயின் நம்முடைய இருதயத்தில் ஒரு மாற்றத்தைத் தேவன் எதிர்பார்க்கிறார். நம்மை நோக்கி தேவன் "மனம் திரும்புங்கள்” என்று அழைத்ததின் உண்மையான பொருளை இந்த தலைப்பின் வழியாய் அறிந்துக்கொள்வோம்.

# மனம் திரும்புங்கள்

இஸ்ரவேலோடு இடைப்பட தேவன் மோசேயைக் கொண்டு ஆயத்தப்படுத்தின செய்கைகளை அறிவோம். சென்ற அதிகாரத்தில் அந்த வசனங்களைத் தியானித்தோம். இம்முறை இயேசுவானவர் நம்மை சந்திக்கும்படி பூமிக்கு வந்த போது, அவர் சொன்ன வார்த்தைகளை தியானிப்போம். அவர் பல வசனங்களை நமக்குத் தந்திருந்தாலும், நாம் ஆயத்தமாவதற்கு அவர் சொன்ன வார்த்தை "மனம் திரும்புங்கள், பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது” என்பதாகும்.

இயேசு வனாந்திரத்தில் பிசாசினால் சோதிக்கப்பட்ட பின்னர் கப்பர் நகூமிலே வந்து வாசம் பண்ணினார். (மத்தேயு 4:17). அது முதல் "இயேசு மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்”. என்ன வேறுபாடு கவனியுங்கள். பழைய ஏற்பாட்டின் மக்களுக்கு கொடுக்கப்பட்ட வார்த்தை "பரிசுத்தமாகுங்கள்". புதிய ஏற்பாட்டு மக்களுக்கோ "மனம் திரும்புங்கள்”.

# மனம் திரும்புங்கள் : பரிசுத்தமாகுங்கள்

பழைய ஏற்பாட்டில் பரிசுத்தமடைய இஸ்ரவேலர் செய்ய வேண்டிய காரியங்கள் அந்நிய தேவர்களை விலக்குதல், வஸ்திரங்களைத் தோய்த்தல், உடலுறவிற்கு விலகியிருத்தல், இந்த ஆயத்த நிலைமையை இன்னும் நாம் சரியாக புரிந்துக் கொள்ளவில்லை.


சரீரம் மற்றும் வஸ்திரத்தையல்ல, உள்ளத்தை சுத்தப்படுத்த தேவன் வேண்டுகிறார். யோவேல் தீர்க்கதரிசி இதனை உணர்ந்தவராய் தம்முடைய வசனங்களில் இவ்வாறாகக் கூறியுள்ளார்.

> “நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்”
> **யோவேல் 2:13**


தேவன் எதிர்பார்த்தது, நம்முடைய இருதயம் அவர் பக்கமாய் திரும்ப வேண்டும் என்பதே. ஆனால், நாம் அவரிலும் ஞானவானாகி அவர் சொன்ன செயல்களையெல்லாம் செய்து, இன்னும்  மனதளவில் அவரை விட்டு விலகியிருக்கிறோம் என்பதை தேவன் அறிந்தவராயிருக்கிறார்.

> "கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்"
> **I நாளாகமம் 28: 9**

"மனம் ", "திரும்புங்கள்" என்ற இரண்டு பதத்தையும் தனித்தனியே எடுத்து தியானியுங்கள்.



"மனம்" என்றால் இருதயம் அல்லது சிந்தனை என்று பொருள் கொள்ளலாம்.



"திரும்புங்கள்" - "செல்லும் திசையிலிருந்து முற்றிலும் விலகி வேறு திசையில் செல்வது”. திரும்பி விட்டால் நான் முன்னே கண்ட காட்சி என் முன் நில்லாது, நான் இப்போது வேறு பாதையில் வேறொருவரோடு.

# குழந்தையை கவனியுங்கள்



ஏதோ ஓர் விஷயத்திற்காக அழுது கொண்டே இருக்கும். சட்டென்று ஓர் இனிப்பு அல்லது பொம்மை அல்லது அம்மா அவர் மனதை திருப்பிவிடுவார். அந்த குழந்தை முன்போல் விளையாட ஆரம்பித்து விடும்.


எதற்காக அழுது கொண்டிருந்தோம் என்பதை மறந்து விட்டு, புதிய விஷயத்தின் ஈர்ப்பு பழைய விஷயத்தை மறக்கச் செய்யும். ஆனால் மோசேயின் மூலம் தம்முடைய பலத்த செய்கைகளை செய்து நம்மை திருப்பிக் கொள்ள நினைத்த தேவனுக்கு, மீண்டும் ஏமாற்றம். இம்முறையோ - “உங்கள் இருதயம்/மனம் என் பக்கமாக திரும்பட்டும்” என்று நேரடியாக சொல்கிறார்.

> "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா"
> நீதி. 23:26

இந்த இருதயத்தை நாம் ஓர் ஆய்வு செய்து பார்த்தால், நாம் ஓர் நபரைப் பற்றி எளிதாகக் கூறிவிடலாம். அவருக்குப் பிடித்தது, பிடிக்காதது, நல்லவரா, கெட்டவரா என்று பல விஷயங்கள் இந்த இடத்தில் தான் உள்ளது. நீங்கள் உங்கள் மனம் சொல்லும் வண்ணமே நடந்து கொள்வீர்கள். அந்த மனதில் யார் குடியிருக்கிறார்களோ, அவர் சொல்வதையே அந்த மனம் கேட்கும். இப்பொழுது, நாம் நம்முடைய மனதிற்கும் செயலுக்கும் உள்ள நெருக்கத்தை தேவன் எவ்வாறு விளக்கியுள்ளார் என்பதை கவனிக்கலாம்.

# கொலை - கோபம்

எடுத்துக்காட்டாக பழைய ஏற்பாட்டின் ஓர் கற்பனையான 'கொலை செய்யாதிருப்பாயாக' என்பதை, நாம் இதுவரை அநேகர் கைக்கொண்டு வந்துள்ளோம். ஆனால், புதிய ஏற்பாட்டில் தேவன் செயலையல்லாமல், செயலின் பிறப்பிடமாகிய நம் மனதை சுட்டிக்காண்பிக்கிறார். இருதயத்தில் நாம் அந்த செயலுக்கு இடம் கொடுத்திருப்பதை, அவர் முன் அறிந்து "மனம் திரும்புங்கள்" என்கிறார்.



> "உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது:
> இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்
> உமக்கு இருளும் வெளிச்சமும் சரி"
> **சங்கீதம் 139 : 12**

என்று சங்கீதக்காரர் அழகாகச் சொல்கிறார். நம்முடைய இருதயத்தின் நினைவுகள் தேவனுக்கு வெளியரங்கம்.

> "கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப் பட்டிருக்கிறீர்கள்".
> **மத்தேயு 5:21**

> "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் : மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்."
> மத்தேயு 5:21, 22

கோபம் எங்கேயுள்ளது, கொலை எங்கேயுள்ளது? இவ்விரண்டிற்கும் ஒரே தண்டனையா? இது எப்படியாகும் என்று கவனிப்போமா. எந்த ஒரு செயலும் வெளியரங்கமாய் நிகழும் முன்னே, எண்ணத்தில் அது கருவுருகிறது என்பதே உண்மை. நம்முடைய மனதில் நாம் கோபம் என்ற எண்ணத்தை பயிர் செய்ததின் பலனே நாம் கொலை என்ற செயலை முடிவில் அறுக்கிறோம்.

## எண்ணங்கள் - செயல் ஆகும்


எப்படி ஓர் கருவானது ஒன்பது மாதங்கள், கருப்பையில் தன்னுடைய வளர்ச்சியை அடைந்து, குழந்தையாக உருவெடுக்கிறதோ, அதைப்போலவே நமது எண்ணமும் செயலும் என்பது திண்ணம். உதாரணத்திற்கு ஒருவர் கொலை என்ற செயலுக்கு தன்னை விட்டுக்கொடுக்கும் முன், அவருடைய எண்ணங்கள் படிப்படியாக எப்படியிருக்கும் என்று கவனியுங்கள். ஒருவர் செய்யும் காரியத்தினால்

- “நான்” பாதிக்கப்படுகிறேன்
- "கோபமடைகிறேன்” மற்றும் “வெறுப்படைகிறேன்"
- அந்த நபருடன் பேசுவதைக் குறைக்கிறோம்

- கண்ணில் தென்படுவதை அல்லது சந்திப்பதைத் தவிர்க்கிறோம்
- மற்றவரிடம் அவரைப்பற்றிக் குறைத்துப் பேசுகிறோம் (வீணன்) கோபமாய் பேசுகிறோம்.
- அவரைக் கண்டுவிட்டால், சுற்றி இருக்கும் பொருள் அல்லது நபர் மீது நமது கோபம் வெளிப்படுகிறது.
- மீறி அவர் பேச முயன்றால், அவதூறான வார்த்தைகள் (கெட்ட வார்த்தை-மூடனே)
- அடுத்ததாக கைகலப்பு
- முடிவாகக் கொலை

இந்த ஒன்பதாம் கட்டத்தைத் தவிர்க்க, முதல் சுட்டத்தைத் தவிர்க்க வேண்டும். தேவன் கொலை செய்யாதிருப்பாயாக என்று உரைத்ததின் ஆழம் மிகவும் அதிகம். நமது சிந்தனை சீராக இருந்தால் ஒழிய இந்தக் கட்டளையை நம்மால் கைக்கொள்ள இயலாது. ஒவ்வொரு கட்டமாய் கவனிப்போம்:

## 1. “நான்” - பாதிக்கப்படுகிறேன்




"நான்" எப்போது பாதிக்கப்படுகிறேன்? என்னை நான் நேசிக்காத வரையில் நான் பாதிக்கப்பட்டதை என்னால் உணருதல் கூடாத காரியம். நான் என்னை நேசித்தேன் என்பதே உண்மை. இதனால்தான் மற்றவருடைய சொல்லும் செய்கையும் நம்மைப் பாதிக்கிறது. இதைத்தான் “நான்” என்ற மனக்கோட்டை என்று கூறுகிறோம்.

உதாரணத்திற்கு நான் நேர்மையானவன், அன்பானவன், தர்மம் செய்பவன், நீதியாய் நடப்பவன், குற்றமற்றவன், என் குணம் என்ன, ஆஸ்தி என்ன, குடும்பம் என்ன, பொறுமை என்ன, நான் இப்படிப்பட்டவன், அப்படிப்பட்டவன் என்று தங்களைக் குறித்து, ஓர் மனக்கோட்டையைக் கட்டி வைத்திருக்கும் அநேகர் உண்டு. இவர்கள் தங்களைத் தாங்களே நேசிப்பது உண்மை. சில, சமயங்களில் நம்மை அறியாமலேயே இந்த "நான்" என்ற மனக்கோட்டை செயல்படுவது தான் ஆச்சரியம்
(2 கொரி 10:18).

## 2. “கோபம் அடைகிறேன்”

இந்தக் கோட்டையில் சிறு விரிசல் விழுந்தாலும் கோபம் என்னும் உணர்ச்சி உள்ளே நுழைந்து விடுகிறது. இந்த கோபம் என்ற உணர்ச்சி நம்மில் எழவே கூடாது என்பதை தேவன் விரும்புகிறார்; மேலும், தேவனை விலக்கி சுயத்தில் மேன்மை பாராட்டும் மக்களை அவர் வெறுக்கிறார்.



நம்மை நாமே நிதானித்துக் கொள்வோம். "கோட்டையிருந்தால் தானே விரிசல், நான் என்ற மனக்கோட்டை இருந்தால் தானே கோபம் என்ற விரிசல்" நம் சகோதரர் மேல் கோபம் கொள்ள நாம் நம்மை நேசிப்பது தான் காரணமா என்பதை தொடர்ந்து ஜெபத்துடன் வாசித்து அறிந்து கொள்வோம்.

## 3. சகோதரனிடத்தில் பேசுவதைத் தவிர்க்கிறோம்

மிகவும் திட்டமாய் இப்போது நாம், தேவனுடைய அன்பில் நிலைக்கவில்லை என்பது புலப்படுகிறது. உங்களுக்கு அன்பு காட்டுபவரிடம் நீங்கள் அன்பாயிருப்பதின் பயன் என்ன என்று தேவன் கேட்கிறார்.

> "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன?"
> மத்தேயு 5:46

அப்படியென்றால் நம்மை வெறுக்கிறவர்களிடத்தில் நாம் எவ்வளவு அதிகமாய் அன்பு செய்யக் கடன்பட்டிருக்கிறோம். மிகவும் கவனிக்க வேண்டியது, இங்கு யாரும் உங்களை வெறுக்கவில்லை. நீங்கள் தான் மற்றவரிடத்தில் கோபமும், வெறுப்பும் அடைந்திருக்கிறீர்கள். இதனால் தான் தேவன், முதலாவது நமது கண்ணில் இருக்கும் உத்திரத்தை எடுக்க வேண்டும் என்கிறார்.

> “நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் .. மாயக்காரனே ! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப் போடு...!" சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?.
> மத்தேயு 7 : 3, 5


தற்போது இந்த கோப உணர்வு சற்றே பெலனடைந்து உரையாடலைத் தடுக்கிறது. வெளியரங்கமாய் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்து சுடந்து விடுகிறோம்.

## 4. சகோதரன் கண்ணில் எதிர்ப்படுவதைத் தவிர்க்கிறோம்

நம்மிடம் எல்லாக் குறைகளையும் வைத்துக் கொண்டு மற்றவர்களை வெறுப்பதும், அவர்கள் மேல் கோபமடைவதும் நியாயம் அன்று. மீண்டும் வாசிப்போம்.

> "தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன்"
> மத்தேயு 5:22

> "பிரிந்து போகிறவன் தன்னுடைய இச்சையின்படி செய்ய பிரிந்து போகிறான்"
> நீதி. 18:1




தன் சகோதரனை விட்டுப் பிரிகிறவனும் அப்படியே, தேவனுடைய அன்பில் நிலைக்கவில்லை என்பேத உண்மை. இதை வாசிக்கும் போது நம்முடைய உள்ளுணர்வு நமக்கு என்ன சொல்கிறது கவனியுங்கள். நமது கோபம் நியாயமானது தான் என்று உரத்த சத்தமிடுகிறதா?

எனக்குத் தெரியும், அந்த நபரைக்குறித்து அவருடைய குற்றங்கள், அவர் இழைத்த கொடுமைகள், செய்த தீமைகள் என்று பட்டியல் போட்டுக் கொண்டே போகலாம். இன்னும் நம்மை நாம் நியாயப்படுத்திக் கொண்டு தான் இருக்கிறோம். “நான்” என்ற மனக்கோட்டையை மிகவும் பத்திரமாய்ப் பாதுகாத்து வருகிறோம். 'நான்” நியாயமாகத் தான் கோபப்படுகிறேன் என்னுடைய கோபம் நியாயமானது தான்.

தேவன் நியாயமில்லாமல் கோபம் கொள்பவன் என்று தானே சொன்னார். ஆனால் என் கோபமோ நியாயமானதாயிற்றே!

நாம் செய்யும் எந்த ஒரு செயலும் கர்த்தரை மேன்மைப்படுத்த வேண்டுவதாயின்; நாம் ஒருவரை வெறுப்பது தேவனை எந்த விதத்தில் மேன்மைப்படுத்தும். நம்முடைய அன்புக்கு பாத்திரமானவர்களை நாமே தேர்வு செய்து கொண்டது தான் எல்லா கோபத்துக்கும் மூலக்காரணம்.




நாம் கட்டின “நான்” என்ற கோட்டையில் வசிக்க ஒருவரைத் தேர்வு செய்து, அவர் மேல் எல்லா அன்பையும் பொழிகிறோம். நிதானிக்க வேண்டிய விஷயம் கர்த்தர் அல்லாது நானும் இல்லை, நான் நேசிக்கும் அந்த இன்னொரு நபரும் இல்லை.

தேவனுடைய விருப்பத்தை விட்டு, நான் என்னுடைய விருப்பத்திற்கு ஏற்ப நடக்க முயலுவதே, இந்த கோபத்துக்குக் காரணம். இன்னார் என்னை ஏமாற்றிவிட்டார். அவர் மேல் நான் கோபப்படுவது நியாயம் தான் என்கிறீர்களா! யாரும் உங்களை ஏமாற்றவில்லை. உங்கள் நம்பிக்கையை யார் மேல் வைத்தீர்கள். நீங்கள் ஏமாற்றப்படுவதற்கு மனுஷர்மேலோ அல்லது மனுஷரைப் படைத்த தேவன் மீதோ என்று ஆராய்ந்து பாருங்கள். மனுஷர்மீது நம்பிக்கை வைப்பது விருதா. மீறி வைத்தால் ஏமாற்றம், பின் கோபம்.

இன்னமும் நீங்கள் உங்கள் கோபத்திற்கு நியாயம் பாராட்டிக்கொண்டிருந்தால் தொடர்ந்து படியுங்கள். தேவன் மாத்திரமே உன் நம்பிக்கைக்கு பாத்திரர் என்பதை உனக்கு விளங்க வைக்கவே இத்தனை பிரயாசமும். ஒரு சிலருக்கு தேவன் மீதே கோபமுண்டு, இவர்களுக்கும் தேவன் இந்த புத்தகத்தின் மூலம் இடைப்படுவார். ஆமென்.

## 5. வீணன் - சகோதரனிடம், சகோதரனைக்குறித்து

நான் சகோதரனை வீணன் என்று தீர்ப்பது, தேவனுடைய சிருஷ்டியை, படைப்பினை விமர்சிப்பது போலாகும். இங்கு நாம் கவனிக்க வேண்டிய விஷயம், நம் சகோதரன் "நமக்கு" வீணன் ஆனார். "நான்" என்ற எனக்கும், எனது மனக்கோட்டைக்கும் வீணன் ஆனார்.



அநேக வேளையில் தேவன் எடுத்துப் பயன்படுத்தும் நபர்களின் வாழ்க்கையை உற்று நோக்கினால், அவர்கள் தங்களை வெறுத்தவர்களாக சில வேளையில் தங்களை மாய்த்துக் கொள்ளவும் துணிந்திருக்கிறார்கள் என்பதையும் காணலாம்.

வாழ்க்கையில் பல பக்கங்களிலிருந்து நொறுக்கப் பட்டிருப்பார்கள். தங்களுக்குத் தாங்களே வீண் என்றும், அவர்கள் ஜீவிப்பதில் ஒரு பயனும் இல்லை என்று கருதி தங்கள் வாழ்க்கை ஓட்டத்தை முடிக்க நினைத்தவர்கள் அநேகர்.

இதுவரை அவர்கள் வாழ்ந்ததின் நோக்கம், தங்களால் ஏதோ ஒன்று முடியும் என்றும், தங்களால் பலருக்குப் பயன் உண்டு, தங்களிடம் திறமை உள்ளது, முயற்சியுள்ளது, கல்வி உள்ளது, செல்வம் உள்ளது, என்னை நேசிப்பவர்கள் இருக்கிறார்கள் என்றும் நினைத்தார்கள். தங்களால் தங்களுக்கே அல்லது சுற்றத்தாருக்கும் ஓர் பயன் இருந்தது என்பது அவர்களுடைய ஓட்டத்துக்கு உறுதியைக் கொடுத்தது. என்னால் முடியும், என்னிடம் உள்ளது போன்ற எண்ணங்கள், சுயத்தின் மேல் அதாவது தங்களையே நம்பிக்கொண்டு வாழ்க்கை வாழ்வதற்குக் காரணங்களாயிருந்தன.


திடீரென்று, தன்னால் எதுவும் இயலாது, உடல் நலம் சரியில்லை, மனநிலை சரியில்லை, நான் கெட்டவன், பணம் இல்லை, ஞானம் இல்லை, பெலன் இல்லை, அன்பு இல்லை, அவமானமும் நிந்தையும் தான் நிலைத்திருக்கிறது என்பதை உணருகிறார்கள்.



என் வாழ்க்கை இருண்டு விட்டது, நான் எதற்குமே உபயோகம் இல்லை (வீண்) என்று ஒருவர் தன்னைக் குறித்து கருதும் அந்தச் சமயத்தில் தான், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய இராஜ்ஜியத்திற்கு நம்மை அழைக்கிறார்.

இதுவரை நான் நம்பிக்கொண்டிருந்த உலகத்தினால் எனக்கும் பிரயோஜனம் இல்லை, என்னால் உலகத்திற்கும் நன்மை இல்லை என்று எண்ணும் போது தான் அவர் நம்மைத் தேர்வு செய்கிறார். நாம் ஓய்ந்து விட்டோம், நம்முடைய ஓட்டத்தில் அயர்ந்து விட்டோம். தோல்வியை மட்டுமே தழுவியுள்ளோம். ஏன் ஜீவிக்க வேண்டும் என்ற எண்ணம் பிறக்கிறது. நாம் முற்றிலும் செயலிழந்தவர்களாய் காணப்படும் வரை தேவன் நம்மை நமது பயணத்தில் அனுமதிக்கிறார்.


இப்போது நாம் தேவனுக்கு உபயோகப்படலாம். நாம் நம்மில் செயலிழக்காதவரை தேவன் நம்மைக் கொண்டு எதுவும் செய்ய இயலாது. நாம் நம்மை மண்ணென்று நினைவுகூறாமல் ஓர் கோட்டையை கட்டியிருப்பது தான்; தேவன் நம்மிடத்தில் கிரியை செய்வதில் இருந்து தவிர்க்கிறது.



நிஜமாகவே தேவனுக்கு பயன்படுபவன், உலகத்திற்குத் தேவையற்றவன். ஆகவே நாம் தேவனுடைய கிரியையான எந்த மனிதனையும் நியாயம் தீர்ப்பது நன்றன்று. வீணனென்று கூறுவது நமது வேலையும் இல்லை. நம்முடைய எந்த ஒரு சிந்தனையும், செயலும் தேவனை மகிமைப்படுத்துவதாயிருக்க வேண்டும். (I கொரி 1:28, 29).

## 6. செயல்

இத்தனை நேரம் நமது “சிந்தனையில்" உறங்கிக்கொண்டு இருந்த கோபம், தற்போது செயலாக உருவெடுக்கிறது. கவனிக்க வேண்டிய விஷயம், இதுவரையில் நான் இப்படி கோபமாயிருப்பது யாருக்குமே தெரியாது, என் தேவனைத் தவிர. எனவேதான் நமது மனதை உற்றுநோக்கிக் கொண்டிருக்கும் தேவன் நம் மனம் சீராக இருக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துகிறார். இதுவரை என்னுடைய எண்ணமும், செயலும் வேறுபட்டிருந்தது. நான் நடக்கையில் நல்லவனாயிருந்தேன்.




என்னுடைய செயலில் வெளிப்படாத கோபம் இத்தனை நேரம் அல்லது நாட்கள் என்னுள் இருந்தது என்பதே உண்மை. நான் திருந்தி விட்டேன். அல்லது மாறிவிட்டேன் என்று நம் செயலில் நாம் சாதித்தாலும், மனதில் இன்னமும் அந்தக் கோபம் நிலைத்திருக்கிறது.

ஆகவேதான் தேவன் மிகவும் குறிப்பாக "**மனம் திரும்புங்கள்**" என்று சொல்கிறார். இதுவரை நீங்கள் கொலை செய்யாததினால் நீங்கள் நல்லவர்களென்று கூற முடியாது. உங்கள் மனம் திரும்ப வேண்டும். கோபத்தை விட்டுத் திரும்ப வேண்டும். "சிந்தனையே செயலாகும்" என்றால், உங்கள் மனம் மாற வேண்டியதின் அவசியத்தைத் தேவன் தெளிவுபடுத்துகிறார். நம்முடைய சிந்தனை, மனதின் எண்ணங்கள் யாவும் பரிசுத்தமாய் இருக்க தேவன் விரும்புகிறார். பரிசுத்தரின் சிந்தையாகவே இருக்க விரும்புகிறார்.

> "கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து,
> நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்."
> **1 நாளா 28:9**

கட்டளைகளைக் கைக்கொண்டு நாம் நீதிமான் என்று நம்மை நாமே ஏமாற்றின காலங்கள் போதும். தேவன் பரிசேயருக்கு கூறிய வசனங்களை நினைவுகூறுவோம்.

> "அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள்
> என்று புறம்பே காணப்படுகிறீர்கள்;
> உள்ளத்திலோ, மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும்
> நிறைந்திருக்கிறீர்கள்"
> **மத்தேயு 23:28**



இப்போது உங்கள் இருதயத்திலிருந்த கோபம் வளர்ந்து செயலாக வெளிப்படுகிறது. கண்டிப்பாக உங்களது செயல், ஒரு நாள் உங்களைக் காட்டிக்கொடுக்கும். மனுஷருக்கு வேண்டுமாயின் அப்போது தான் நீங்கள் பாவியாக காணப்படலாம். ஆனால் இருதயங்களை ஆராய்ந்து அறிகிறவருக்கோ, முன்னமே எல்லாம் வெளிச்சம், ஆகவே, சிந்தனையை சீர் செய்ய வேண்டுகிறார். “மனம் திரும்புங்கள்".

## 7. மூடனே

எத்தனை தவறுகள் நம் மேலுள்ளது என்பதை கவனித்தீர்களா? "நான்" என்ற நமது சுயத்தை நேசித்து அதன் மேல் நம்பிக்கை வைத்தது முதலாம் தவறு. அந்த "நான்" என்ற கோட்டை உடைந்ததற்கு காரணமாக இன்னொருவரைக் கைகாட்டியது இரண்டாம் தவறு. நமது கண்ணில் உத்திரத்தை வைத்துக் கொண்டு சகோதரனைப் பழிப்பது இன்னொரு தவறு. தேவனுடைய கிரியையாய் இருக்கும் எந்த மனிதனையும் நியாயம் தீர்ப்பது மிகப்பெரிய தவறு.



ஆக, இத்தனை தவறுகளை நம் மேல் வைத்துக்கொண்டு, சகோதரனை நியாயமில்லாமல் மூடனே என்பது. தேவனையும் அவர் படைப்பையும் குற்றம் கூறுவதற்குச் சமானம்.

- நாம் தேவனுடைய கையில் அலங்காரமான கிரீடம் (ஏசாயா 62:3)
- விசேஷித்தவர்கள் (லூக்கா 12:24)
- ராஜாக்களும், ஆசாரியர்களுமாய் அழைக்கப்பட்டவர்கள் (வெளி. 1:6)
- ஒரே ஆவியினால் நம்மை நிறைத்திருக்கிறார் (1 கொரி 12:13)
- ஒருவரையொருவர் கனப்படுத்த முந்திக்கொள்ள வேண்டும். (ரோமர் 12:10)

இப்படியிருக்க, நாம் நமது சகோதரரை எத்தனை அதிகமாய் கனப்படுத்த வேண்டும். அவர் நம் தேவனுக்குப் பிரியமான நபர்.

பொதுவாக, நம்முடைய நெருங்கிய நண்பரை நாம் நன்றாகவே கவனித்துக் கொள்வோம். நல்ல உபசரிப்பு, விருந்து, பரிசு என எல்லாம் அவருக்கு உண்டு. அவருடைய நட்பின் மூலம் நம்மை அணுகுபவரும் அதே உபசரிப்பைப் பெறுவர். அவ்வாறிருக்க, இயேசுவிற்குப் பிரியமான யாவரையும், நாம் கனப்படுத்த வேண்டியது நமது கடமை. நாம் கர்த்தரால் உண்டாக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தரே நமக்குத் தொடக்கமும் முடிவுமாயிருக்கிறார். அவரன்றி நாம் இல்லை. இந்த உலகத்திற்கு நாம் வந்தது அவர் மூலமாய், நம்முடைய இறுதி காலமும் அவர் கரங்களிலேயே உள்ளது. இப்படியிருக்க, இடைப்பட்ட காலத்தில் நாம் ஓடும் ஓட்டத்தை நினைத்துப் பாருங்கள். நம் கையில் தான் எல்லாமுள்ளது போல் ஓர் தீவிரமான வாழ்க்கை. முதலும் அவரே, முடிவும் அவரே. இடைப்பட்ட காலத்திற்கும் அவரே ஆண்டவர்.

இயேசு பூமியில் வந்து வாழ்ந்த காலத்தில் அவர் நியாயம் தீர்க்க முற்படாமல் எல்லோரையும் மன்னிக்க முற்பட்டார். தேவனாகிய பிதாவை மகிமைப்படுத்தினார்.

> "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான்"
> நீதி. 25:28

ஒவ்வொரு தேவ வார்த்தையையும் நம்மை சுத்திகரிக்க நாம் தியானிப்போமாகில் மற்றவர்களை நியாயம் தீர்க்கமாட்டோம். நியாயத் தீர்ப்புத் தேவனுடையது. மற்றவர் குற்றமே என் கண்களில் தெரியுமானால் நான் கூடிய சீக்கிரத்தில் ஒரு மதிலிழந்த பட்டணம் போல், முழுவதும் சூறையாடப்படுவேன்.

கோபப்பட்டு, நம்முடைய சந்தோஷம், சமாதானம், நிம்மதி, ஐசுவரியம் மற்றும் நமக்கு எல்லாமுமான தேவனை இழந்து போவோம்.

## 8. சகோதரனுடன் சண்டை கைகலப்பு

என் மனதில் நான் இடம் கொடுத்து வளர்த்துக் கொண்டிருந்த இந்த கோபம் தற்போது என் கண்களை முழுவதும் மறைத்து விட்டது. நான் என் சகோதரன் மேல் கையெடுக்கத் துணிந்து விட்டேன். தேவன் மகிமைப்படுவதற்கு இடம் கொடுக்கவில்லை.



இந்த சம்பவம் ஒரே நாளில் நடக்கவில்லை. பல நாட்கள், வாரங்கள், மாதங்கள் வருடங்கள் நம் சிந்தனையில் நாம் வைத்து பேணிக்கொண்டிருந்ததின் விளைவு, இன்று நம் சகோதரனை நாம் அடிக்கத் துணிகிறோம்.

என் மேல் நான் கொண்ட ஆசையே, என் சகோதரனை அடிக்க நான் வளர்த்த கோபம் என்ற சிந்தனையாகும்.

இருதயத்தின் நினைவே சகல செய்கைக்கும் ஊற்றுக்கண் என்பதை தேவன் அறிவார். அதனால் தான், இருதயத்தில் பரிசுத்தத்தை எதிர்பார்க்கிறார். அவரால் மட்டுமே நம்முடைய உள்ளத்தைப் படம் பிடிக்க முடியும். (ஆதி. 18: 12 ...15) சாராள் தன் உள்ளத்திலே நகைத்ததை தேவன் கவனித்து விட்டார். நம்மையும் அவர் அவ்வாறே அறிந்து கொள்வார். நம்மில் அவருடைய சாயல் சற்றேனும் வெளிப்படுகிறதா என்று யோசிப்போம்.


> "அவரை சிரசில் கோலால் அடித்து, அவர் மேல் துப்பி ..."
> மாற்கு 15:19

குற்றமற்ற நமது தேவனை நாமே இப்படி செய்திருக்க, நம்மைத்தண்டிக்க அவர் எத்தனை உரிமையுள்ளவராய் இருக்கிறார். ஆனால் அவர், தமது மிகுந்த மனதுருக்கத்தின்படி நமது குற்றங்களுக்காக பலியாகி, நம்முடைய மீறுதல்களை மன்னித்தார். ஆனால் நாமோ, தேவனுடைய அன்பை எப்படி வெளிப்படுத்துகிறோம் என்று ஆராய்ந்து பாருங்கள். தேவன் நம் மூலம் மகிமைப்படுகிறாரா!

நமக்கு இழைக்கப்படும் தீமைக்கு நாம் சும்மாயிருந்தால் தேவன் மகிமைப்படுவார், மாறாக ஆவேசப்பட்டாலோ தேவனை மகிமைப்படுத்துவதில் தவறுவோம்.

## 9. கொலை

> "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்"
> ஆதியாகமம் 2:7



நாம் தேவனால் உண்டாக்கப்பட்டோம் என்பதை மறந்து, தேவன் கொடுத்த ஜீவனை எடுக்க முயலுகிறோம். காரணம், ஒரு சிறிய கோபத்தில் இருந்து இப்படியாக வளர்ந்தது.

கொலை என்று எண்ணும் போது தான் நாம் கட்டளையை மீறியதை உணருகிறோம். ஆனால் தேவனை மறந்து நாம் நம் மனதில் கோபத்தை வளர்த்த போதே நாம் பாவத்திற்கு உள்ளாகி விட்டோம். முன்னே வாசித்தது போல நம்முடைய கோபத்துக்கு நியாயமான காரியம் எதுவுமில்லை. நாமே காரணம், "தேவனை மறந்ததே காரணம்".

முதலாவது, “நான்” என்ற கோட்டையை தகர்த்தெறியுங்கள். தேவன் இல்லாமல் "நான்" யார்? என்னுடையது என்பது எது? என்னுடையது என்று எதுவுமில்லாத போது எதை "நான்” இழந்தேன், துக்கிப்பதற்கு! தேவனோடு நாம் இருக்கும் போது தேவனைக்குறித்த சிந்தையினால் நிறைந்திருப்போம். தேவன் பூமிக்கு வந்த போது, செய்த ஜெபமானது

> "ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்"
> **மத். 26:39**

அவர் தம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வந்தார், நாம் யாருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறோம்? நம்முடையதா அல்லது நம் அன்புக்குரியவர்களின் சித்தத்தையா? நாம் தேவனோடு இருந்தால், என்னுடையது என்று நான் எதையும் சொல்லாமல், அவருக்காக நான் பலருக்கும் செலவு செய்யப்படுவதையே யோசிப்பேன். நம் பாவங்களுக்கு அவர் கிரயமாகி நம்மை மீட்டுக் கொண்டார்.



பவுல் அடியாரோ "நான் உங்கள் ஆத்துமாக்களுக்காக செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன்” என்கிறார். இதுவரை நான் என்னுடைய இழப்பை குறித்தே யோசித்துள்ளேன். ஆனால், எப்போதாவது நம்மை இழந்து பலரை மீட்க நினைத்துள்ளேனா? மீண்டும் சொல்கிறேன். நம்முடைய கோபம் யார் மீது இருப்பினும் அது நியாயமற்றதே.

தேவன் நம் மீது வைத்த அன்பினால், தம்முடைய ஒரே பேரான குமாரனை நம்முடைய இரட்சிப்புக்கென்று கொடுத்தார். தாமே பலியாகி நம்மை மீட்டுக் கொண்டார். நான் தேவனோடு நெருங்கி இருப்பேனாயின், தேவன் சொல்வது,

> "மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய். எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது"
> லூக்கா 15:31

"மூடனே" என்று தன் சகோதரனை சொல்பவன் எரிநகரத்துக்கு ஏதுவாயிருப்பான் என்றால் நாம் எங்கேயிருக்கிறோம், நம்முடைய இருதயம் என்ன சொல்கிறது, கர்த்தர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

> 'நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல. நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்"
> மத்தேயு 5: 17

நியாயப்பிரமாணம் நிறைவேற வேண்டுமாயின், மனம்திரும்புதல் மிகவும் அவசியம். நம் மனம் அவருக்கு நேராக திரும்பினாலொழிய நம்மால் அவர் கட்டளையிட்ட நியாயப் பிரமாணத்தை கைக்கொள்ள முடியாது என்பதை தேவன் மிக தெளிவாகக் கூறுகிறார்.

> "'மனம் திரும்புங்கள். பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது"
> மத்தேயு 4: 17

> "மனம் திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்"
> மத்.3:8

> “நீங்கள் மனம் திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"
> மத். 18:3

உங்கள் கனிகளாலே நீங்கள் அறியப்படுவீர்கள். மனம் திரும்பினால் மாத்திரமே நல்ல கனியைக் கொடுக்க முடியும். நாம் நம்மை மறந்து, நம்முடைய மனம் முழுவதும் அவர் பக்கமாய் திரும்பியிருக்கும் அனுபவம் வேண்டும். ஓர் குழந்தையைப் போல, தன் முழு நம்பிக்கையையும், அன்பையும் தன் பெற்றோர் மீது வைத்து விட்டுச் சந்தோஷமாயிருப்பது போல நாமும் அவர் பக்கம் திரும்ப வேண்டும் என்கிறார்.

> "இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்"
> லூக்கா 18:21

நான் அவர் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவரையே நினைத் திருக்கிறேன் என்று உங்கள் மனம் உங்களிடம் பேசுகிறதா? இருக்கட்டும் ; "கொலை செய்யாதிருப்பாயாக" என்ற ஒரு கட்டளை நிறைவேற நமக்கு இத்தனை விளக்கம் தேவைப்பட்டால், முழு நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனமும் நிறைவேற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை தொடர்ந்து வாசிப்போம்.

நம்முடைய செய்கையாகிய கனி, நம்மை யாரென்று காட்டிக் கொடுத்துவிடும். மனிதருக்கு மாத்திரமே இது பொருந்தும், தேவன் இருதயங்களை ஆராய்ந்து அறிகிறவர். நம்முடைய மனம் தேவனை சிந்திக்கிறதா, நாம் தேவனுக்கேற்ற கனிகளைக் கொடுக்கிறோமா? "மனம் திரும்புங்கள் தேவனுடைய இராஜ்யம் சமீபித்திருக்கிறது”.

## சிந்தனைக்கு

- தேவனுடைய கட்டளையை நான் கைக்கொள்கிறேனா?
- வெளிப்படையாகச் சிரித்து விட்டு, உள்ளத்தில் கோபம் கொண்டிருக்கும் அனுபவம் உங்களிடம் உள்ளதா?
- "நம்மைக் குறித்து நாம் என்ன கோட்டை கட்டியிருக்கிறோம்? நான் யாராயிருக்கிறேன்?
- என்னை எனக்குப் பிடிக்குமா, ஏன் பிடிக்கும்? எவ்வளவு பிடிக்கும்?
- ஒருவரை நமது நண்பராக ஏன் தேர்வு செய்கிறோம்? ஒருவரிடத்தில் இருந்து நாம் ஏன் ஓடி ஒளிகிறோம்?
- நான் பேசும் போது யாரை மகிமைப்படுத்துகிறேன்? என்னையா அல்லது தேவனையா? கிருபை பொருந்தின வார்த்தைகள் என்னிடத்தில் உண்டோ?
- என்னை ஆளுவது நானா அல்லது கர்த்தரா? (அவருடைய வார்த்தைகளா?)
- என்னுடைய இருதயத்தின் நினைவுகள் பரிசுத்தமாய் தேவனை மகிமைப்படுத்துவதாய் உள்ளதா? அல்லது கோபம் நிறைந்திருக்கிறதா?
- நம்முடைய சிந்தனையை பரிசுத்தப்படுத்த முயற்சிக்கிறோமா? அதற்கு நாம் என்ன செய்கிறோம்?
- நான் செய்வதெல்லாம் கர்த்தருக்குப் பிரியமானதா என்று சோதித்துப் பார்க்கிறேனா? (எபேசியர் 5:10).
- நான் மனந்திரும்பாமல் காலம் தாழ்த்தினால் என்னவாகும்?
- முதலில் யார் மனந்திரும்ப வேண்டும்? நாம் யாரிடம் மனந்திரும்ப வேண்டும்?